**பக்கம்.**

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண். 134/2025**

**வா.சா.– 1–மகாராஜன் , த/பெ.பொன்னுச்சாமி**

**நாள். 30.03.2026**

**வா.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியும். பிரதிவாதியை எனக்கு 30 வருடங்களாக தெரியும். பிரதிவாதி தாக்கல் செய்த எதிருரையை படித்துப் பார்த்துள்ளேன். பிராதில் சொல்லியுள்ளபடி தாவா சொத்து குறித்து பிரதிவாதி கிரையத்துக்கு பேசவில்லை என்றால் சரியல்ல. கிரையத்துக்குதான் பேசினார். பிரதிவாதி என்னிடம் கடனாக ரூ.10 லட்சம் வாங்கினாரா என்றால் இல்லை, முன்தொகையாக ரூ.10.லட்சம் கொடுத்தேன். ரூ.10 லட்சத்துக்கு பிரதிவாதி வட்டி தொகை செலுத்தியுள்ளார் என்றால் இல்லை. நான் பிராதில் சொல்லியுள்ள கிரைய ஒப்பந்தமாக வா.சா.ஆ.1 ஏற்படுத்தப்படவில்லை என்றாலும் கடனுக்காகத்தான் ஏற்படுத்தப்பட்டது என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்த அனைத்து ஆவணங்களும் பிரதிவாதி கடன் வாங்கியதற்காகத்தான் ஏற்படுத்தப்பட்டவை என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் வாங்கியதான சொல்லும் தொகை அவர் திரும்பி செலுத்த தயாராக உள்ளார் என்றால் எனக்கு கிரையம்தான் செய்ய வேண்டும். நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.30 22:31:55 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.